ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2159/46 - 2020 ජනවාරි මස 24 වැනි සිකුරාදා - 2020.01.24
*2159/46 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிர.செ. குறிப்பு இல.: ELDS/LND/04/ACQ/2017/04.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2017/VE/584.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில் எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில், நவதுன் கோறளையில் பல்லெ பத்துவையில் சமன்கம கிராம அலுவலர் பிரிவில் (188B) மில்லவிட்டிய என்னும் கிராமத்தில் அமைந்துள்ள காணியின் விபரம் : திட்டப்பட இல.- மு.கி.ப. 63, மேலதிக இல. 12.

**துண்டு இல. 175 - காணியின் பெயர்: மில்லவிட்டிய தோட்டம்; விஸ்தீரணம்: 2.2995 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 20, 21 மற்றும் பாதை; கிழக்கு: துண்டு இல. 21 மற்றும் பாதை; தெற்கு: பாதை மற்றும் துண்டு இல. 20; மேற்கு: துண்டு இல. 20 மற்றும் 21.

உரிமை கோருபவர்: பலாங்கொடை பயிர்ச்செய்கைக் கம்பனி, த.பெ. இல. 06, பாம்காடன், இரத்தினபுரி.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு எலபாத்த பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். ஏ. தில்ருக்
பிரதேச செயலாளர்,
எலபாத்த.

பிரதேச செயலகம்,
எலபாத்த,

2 - 158